முருகப்பெருமான் துணை

**மகான் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.10.2023**, வியாழக்கிழமை

1. அன்னதான ஞான வள்ளலே
அறமிக்க நல்லுலகம் அமைக்க
மன்னவனாய் அவதாரம் புரிந்த
மகானே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது துலைதிங்கள்
அச்சமற நவதிகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 09ம் நாள், 26.10.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமில்லா ஞான உலகம் அமைய
சுப்பிரமண்யர் ஞானம் அருளுகின்ற
4. அருளுகின்ற அரங்கன் திருவடிபற்றி
அறிவிப்பேன் சடாட்சர தீட்சை
வரமெனப் பெற்று வழிபட
வணங்கி அரங்கன் தருமத்தை
5. தருமத்தை வரவேற்று உலகோர்
தரணியெங்கும் செய்து வர
கருமவினை விலகி நிற்கும்
கலித்துன்பங்களும் அகன்றுமேவி
6. மேவியே எங்கும் அரங்கனின்
மேலான சக்திநிலை பெருகி
அவனியில் அரங்கன் வழிகாட்டலில்
அனைவருக்கும் ஞான சித்தியும்

7. சித்தியும் புண்ணியபலமும் கூடி
செப்பிட உலகோர் அனைவருமே
இத்தரையில் ஞானிகள் ஆவர்
இந்த உலகை மாற்றுகின்ற

8. மாற்றுகின்ற மகா சக்திகளாக
மண்ணுலகில் நல்லத் தலைமைகளை
ஆற்றல்பட உருவாக்கும் வண்ணம்
அகிலத்தில் ஞான ஆட்சிதனை படைப்பர்

9. படைக்கவே அரங்கன் உருவாக்கும்
படைகளாம் ஞானப்படைகளை
தடையற உலகமெங்கும் அமைத்திட
தரணியில் முருகப்பெருமானின்

10. பெருமானின் ஏழாம்படைவீடு
பிரணவக் குடிலில் இருந்துமே
வருங்காலம் வளமாக்கும் வண்ணம்
வல்லமை கூடி இனிதே

11. இனிதே எங்கும் முருகப்பெருமான்
இணையிலா சக்தி நிரம்பி
துணிவு கொண்ட ஞான ஆட்சி
தேசமெங்கும் அரங்கேறக் கூடும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–